بسم الله الرحمن الرحيم

**Friday Sermon / வெள்ளிக்கிழமை குத்து.ஃ.பா 16/09/2016**

**(14 Dhul-Hijjah 1437 HIJRI)**

## "THE NEED FOR FRESH SIGNS"

# "நவீனமான இறை அடையாளங்களின் அவசியம்"



**Hazrat Khalifathullah Munir Ahmad Azim (A)**

உலக மக்களுக்கு சலாம் தெரிவித்தப் பிறகு தஷஹ்ஹுதும் தஅவதும், அல்.ஃ.பாத்திஹாவும் ஓதிக் கொண்டு ஹஸ்ரத் முனீர் அஹமது அஸீம் (அலை) அவர்கள் கீழ் வருமாறு தன் பேருரையை ஆரம்பித்தார்.

நாம் வாழும் பூமி மிக சிறியதென விஞ்ஞானிகள் கூறுகின்றனர். மற்று இறைப்படைப்புகளுடன் ஒத்துப் பார்க்கும் பொழுது அவர்களைப் (விஞ்ஞானிகள்) பொறுத்த வரையில் பூமி ஒரு முக்கியமல்லாத பொருளாகும். அவர்கள் கூறிக் கொள்வது முற்றிலும் உண்மையாக இருக்க வேண்டும் எனவில்லை. அதைப் போன்றே ஒரு குறிப்பான மக்களுக்கோ அல்லது ஒரு பிரிவினர்களுக்கோ மட்டும் இறைவன் அவனது தூய வெளிப்பாடுகளை வழங்கிக் கொள்வான் என்பதும் சரியான விஷயமல்ல. ஒரு குறிப்பான மக்களிடம், ஒரு குறிப்பான அன்பு அல்லது பந்தம் இறைவனுக்கு உண்டு என்பதும் உண்மையல்ல. சரியாக கூறிக் கொண்டால் பிரபஞ்சத்தில் இறைவன் பௌதீகமாக தேவையுள்ளவை அனைத்தும் முழுமையாக படைத்து அதை பராமரித்தும், வளரச் செய்தும் எவ்வித வேற்றுமையுமின்றி பூமியில் நிலை நாட்டிக் கொண்டான். நமது நம்பிக்கைப் படி ஒரு இறைவன் (அல்லாஹ்) இப்பிரபஞ்சத்தின் இரட்சகனாக இருக்கின்றான். அதாவது முழு

பிரபஞ்சத்தையும், அதில் நமக்குத் தேவையான அனைத்துப் பொருள்களையும் அவனே நமக்கு வழங்கியிருக்கின்றான். அவன் மட்டுமே நமக்குத் தேவையான எல்லா வித அருள்களையும் வழங்கியிருப்பவன். புசிப்பதும், அருந்துவதும், தண்ணீரும், ஒளியும், வாயுவும் போன்றவையாவும் அவனது படைப்புகள் ஆகும்.

அதைப் போன்றே மனித நிலை நிற்பின் ஒவ்வொரு கட்டத்திலும், ஒவ்வொரு சமூகத்திலும் எல்லா காலக் கட்டங்களிலும் மக்களின் சீரமைப்புக்காக சீர்திருத்தாளர்களை அவன் நியமித்ததுண்டு. திருக் குர் ஆனின் சூரா.்.பாத்திஹாவில் கூறியிருப்பது போன்று, எல்லாம் வல்ல அல்லாஹ் இப்பிரபஞ்சத்தின் இறைவனாகயிருக்கின்றான். உண்மை இவ்வாறுருக்க அதை முன் வைத்துப் பார்த்தால், கால கட்டங்கள் வழியாக மக்களுக்கு வழங்கப்பட்ட வேத நூல்களுக்கிடையில் ஒரு பிதிர்த்துவம் காணயியலாது. உலகம் பாவங்களிலும் அதர்மங்களிலும் சென்றடைகின்ற போது அதாவது பொய், திருட்டு, சண்டை, முழுமையான நல்லொழுக்க வீழ்ச்சி, மனிதன் தூய்மையிலிருந்தும், நன்மையிலிருந்தும் விலகிச் சென்று சுய விருப்பத்திற்கு அடிமைகளாகின்ற காலங்களில் சீர்த்திருத்தாளரின் தோற்றம் உருவாகின்றது. இவ்வகை தவறான செயல்களில், அதாவது தீமைகளில் வீழ்கின்ற போது அவர்கள் ஏக இறை வணக்கத்தை கை விட்டுக் கொண்டு சிலை வணக்கத்தின் பால் உருகிச் சேரவும் செய்கின்றனர். அந்நேரம் மனிதனின் பௌதீகவும் ஆன்மீகவுமான உயர்வை இறைவன் பாதுகாத்துக் கொள்கின்றான். அவ்வகை ஆன்மீக இருளின் போது மானிட குலத்தை சீரமைப்பதற்கு ஒரு நபரை தோற்று விக்க வேண்டுமென அவர்கள் இறைவனிடம் தேவைப்படுகின்றனர். இறைவன் ஒரு பிரதி நிதியை தோற்றுவிக்கின்றான் என்ற கருத்து இயற்கை சட்டத்திற்கு எவ்வித பாதிப்பும் ஏற்படுத்தும் விஷயமல்ல. ஆதம் (அலை) மின் காலத்திலும் மற்று இறை தூதர்களின் காலத்திலும் இருந்த கோதுமை இன்று நம் உணவின் உற்றல்லாதது போன்றும், முன் காலங்களில் கிடைத்திருந்த தண்ணீர் நம் தாகத்தை தணிய வைப்பதற்கான பிரதிவிதியல்லாதது போன்றும், ஆன்மீக விஷயங்களையும் நாம் கண்டு கொள்ள வேண்டும். நம் ஆன்மீக உணவிற்கு சற்று நவீனமானது கிடைத்திடவே வேண்டும். இது இறைவனின் நடைமுறையாகும். மனிதனின் உடலளவிலான வளர்ச்சிக்கு அவன் உணவளிப்பது போன்று ஆன்மீக வளர்ச்சிக்காகவும் அவன் அதை வழங்கிக் கொள்வான். பௌதீகவும் ஆன்மீகவும் ஒன்று சேர்ந்தே முன்னேற்றமடைய வேண்டும். (குறிப்பாக மனிதனின் விஷயத்தில் – உடலும், ஆன்மாவும்) இறைவனை நிராகரிப்பவர்களை பொறுத்தவரையில் இந்த கருத்து மற்றொரு வடிவிலாகின்றது. ஆனால் இறைவன் இருக்கின்றான் என்பதில் நம்பிக்கைக் கொள்பவர்களை பொறுத்தவரையில் அவர்கள் இந்த இரண்டுக் கருத்தையும் முன் வைத்து, அவை இரண்டையும் ஒன்றுக் கொன்றுப் புரிந்துக் கொண்டு அவை இரண்டின் பலனையும் அவர்கள் பெற்றுக் கொள்கின்றனர். பௌதீக அமைப்பினைப் படைத்த அவனே ஆன்மீக அமைப்பினையும் படைக்கின்றான். பௌதீக அமைப்பிற்கேற்ப்ப நவீன உணவை வழங்கி மனிதனை வளரச் செய்வது போன்றே அவன் ஆன்மீக அமைப்பினையும் அவ்வாறே வளரச் செய்கின்றான். உடல் நிலை புது தண்ணீரின்

உதவியைத் தேடிக் கொள்வது போன்று ஆன்மீக நிலை நவீன இறை வெளிப்பாடின் உதவியினை தேடிக் கொள்கின்றது. உடல் உணவினை ஏற்றுக் கொள்ளவில்லையென்றால் பௌதீக உடல் மரணத்தை எட்டி விடும். அதைப் போன்றே ஆன்மீக உணவு அருந்தாமல் இருந்தால் ஆன்மாவும் மரணமடைந்து விடுகின்றது. கடந்த காலங்களிலிருந்துள்ளதில் மட்டும் ஒருவர் கவனம் முட்டிக் கொண்டு வாழ்ந்தால், அது ஆன்மீக விஷயமாகயிருந்தால் அன்னார் ஆன்மீக நிலையில் மரணமடைந்து விட்டார் என்ற தீர்மானத்தில் மட்டுமே நமக்கு சென்றடைய முடிவது. அல்லாமல் மற்று ஏதேனும் தீர்மானத்தில் சென்றடைய முடியுமா?

சூரிய குடும்பத்தை ஆராய்ந்துக் கொண்டதன் அடிப்படையில் மட்டும், ஒரு விண்வெளி விஞ்ஞானியால் இறைவனைக் குறித்து உண்மையான அத்தாட்சிகளை வழங்கிக் கொள்ள இயலாது. ஆனால் இறைவன் உண்மையில் நிலை நிற்கின்றான் என்ற சிந்தனையின் பால் கொண்டு செல்ல முடிந்து விடலாம். ஒரு இறைவன் இருக்கின்றான் என்றும் அவன் உண்மையில் நிலைக் கொள்கின்றான் என்றும் நிரூபித்து விட முடிவது, நபி மார்கள் கற்பித்த பாடங்கள் வழி மட்டுமே என்பது ஒரு பரமார்த்தமாகும். தூய தூதர் முஹமது (ஸல்) விற்கு கட்டுபடுகின்ற தோழனும், இந்த எளிய சேவகனும், அல்லாஹ்வின் தூதனுமான என்னைப் போன்ற ஆள்கள் உலகில் தோன்றிக் கொள்ளாமல் இருந்திருந்தால் இறைவன் இருக்கின்றான் என்பதைக் குறித்த உண்மையான அத்தாட்சிகள் அனைத்தும் மறைந்து போயிருக்கும்.

அடைந்து போன இதயங்களை அல்லாஹ் அவனின் பலம் வாய்ந்த ஒளியால் திறக்கச் செய்வனாக! வரண்டுப் போன இதயங்களை அவனது தண்ணீரால் செழிக்கச் செய்வானாக! அவ்வாறு அவர்களின் பௌதீகவும் ஆன்மீகவுமான கண்கள் உண்மையை உணர்ந்துவிடட்டும். இறைவனின் கட்டளைகள் யாவும் உண்மையானது என்று அவர்கள் கூறட்டும்! ஒவ்வொருவரின் கால கட்டத்திலும் தோன்றும் இறை தூதர்களை அங்கிகரித்துக் கொள்ளட்டும்! இந்த செயல்கள் விதி நாள் வரையிலும் தொடர்ந்து வரட்டும் ! ஆமீன்.

**Issued by:**

**Jamaat Ul sahih Al Islam Dawa Department**

**Tamil Nadu, India (Regd. No. A/693)**

**Web: www.jamaat-ul-sahih-al-islam.com**

**Translated by:**

**Azim Ahmad**

**E-mail: azimahmad070@gmail.com**

**Cell: 9789180817, 9947181650**